**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 24.09.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 7 (LW10)

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜா | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( A2, A3, A4, A6, A7 ஆஜர். A1, A5 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. )

<u>முதன்மை விசாரணை:</u>

கடந்த 3-4 வருடத்திற்கு முன்னர் ஒரு நாள், காலை சுமார் 11.00 மணியளவில் நான் கருப்பையா இறந்துகிடந்ததை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது போலிசார் அங்கு வந்து பார்வையிட்டு, வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் மற்றும் அங்கு கிடந்த பைக்கை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். பார்வை மகஜரிலும், அத்தாட்சியிலும் நான் கையொப்பம் செய்தேன். பின்னர் 108 ஆம்புலன்ஸ்ல் பிரேதத்தை ஏற்றி அனுப்பிவிட்டார்கள். நான் சென்றுவிட்டேன். அந்த **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2** ஆகவும், **அத்தாட்சி அ.த.சா.ஆ.3** ஆகவும் தற்போது குறியீடு செய்யப்படுகின்றன. போலிசார் கைப்பற்றிய பைக்தான் தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:47:49 +0530

உள்ள பைக் ஆகும். அந்த **பைக் சா.பொ.1** ஆகவும், அதன் **புகைப்படங்கள் மற்றும் சிடி அ.த.சா.ஆ.4 மற்றும் அ.த.சா.ஆ 5** ஆகவும் முறையே தற்போது குறியீடு செய்யப்படுகின்றன. அந்த இடத்தில் இருந்து வேறு பொருட்கள் கைப்பற்றினார்களா என்று எனக்குத் தெரியாது. சாட்சி செல்வம் என்பவரை எனக்குத் தெரியும்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் சம்பவ இடத்தில் கிடந்த பைக்குடன் சேர்த்து, இரத்தக்கரை படிந்த துண்டு, இரத்தக்கரை படிந்த செருப்பு, இரத்தம்பட்ட மண், இரத்தம் படாத மண் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும், தற்போது மறதியின் காரணமாக பைக்கை மட்டும் கைப்பற்றியதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் எழுதாத வெள்ளைப்பேப்பர்களில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு கையொப்பங்களும் வெள்ளைப்பேப்பரில் வாங்கப்பட்டவைதான் என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அந்த கையொப்பங்களை நான் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:47:53 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .